TNTP150003602023

Presented on : 21-08-2023
Registered on : 23-08-2023
Decided on : 04-08-2026
Duration : 2 years, 11 months, 14 days

**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக் M.A,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**
**2026-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 04-ம் நாள் செவ்வாய்கிழமை**

**மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை முதலேற்பு மனு எண்.62/2023**
**CNRNo.TNTP150003602023**

விவேக், வயது 24,
த/பெ காமராஜ்,
எண்.340/1 மாரியம்மன் கோவில் தெரு,
கீரம்பூர் கிராமம்,
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

... மனுதாரர்

// எதிராக //

1.சக்தி ஆட்டோமேஷன் ,
பிளாட் எண்.34, பால் காலனி ரோடு,
பெருமாள் கோவில் தெரு,
ASSISI நகர் லிங்க் ரோடு,
மாதவரம்,
சென்னை - 600 060.

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:09 +0530

2.SBI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,
2 வது தளம், எண்.29B ரோஹன்ஸ் ஆர்காட்,
தில்லை நகர் மெயின் ரோடு,
HP பெட்ரோல் பங்க் எதிரில்,
தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி.

... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக இறுதியாக 22.07.2026-ம் தேதியில் விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.S. முத்துகுமார் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், 2-ம் எதிர்மனுதாரருக்காக வழக்கறிஞர் திரு.A. நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . . . .

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 17.11.2022 அன்று ஏற்பட்ட வாகன விபத்தில் காயமடைந்த விவேக் என்பவரால் ரூ.20,00,000/- இழப்பீட்டு தொகையும் அதற்கு 12% வட்டியும் கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| விபத்து நடைபெற்ற நாள் | 17.11.2022 |
| மனு தாக்கல் செய்த நாள் | 21.08.2023 |

**மனுதாரரின் மனு சுருக்கம்.**

(2.1)மனுதாரர் தலைக்கவசம் அணிந்துகொண்டு கடந்த 17.11.2022 -ம் தேதி மாலை 4.30 மணியளவில் அவரது TN 48 AQ 3135 Hero இருசக்கர வாகனத்தில் துறையூர் to பெரம்பலூர் மெயின்ரோட்டில் பெருமாள் மலை அடிவாரம் ஆர்ச்சிலிருந்து கீரம்பூர் ரோட்டிற்கு செல்வதற்காக ரோட்டை கடக்க போக்குவரத்து விதிகளை அனுசரித்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் வடக்குபுற ஓரத்திற்கு சென்றபின்னர் 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டதுமான, TN 18 BJ 1909 மகேந்திரா

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:18 +0530

பொலிரோ வாகனத்தை அதன் ஓட்டுநர் மேற்படி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஹாரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும், கட்டுப்படுத்த முடியாத வேகத்திலும் ஓட்டி சென்று, மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் மனுதாரர் தூக்கி வீசப்பட்டு அவருக்கு இடது கால், வலது கால், தலை மற்றும் அடிவயிற்றில் பலத்த காயங்களும் ஏற்பட்டுள்ளன. மனுதாரர் உடனடியாக முதலுதவிக்காக துறையூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதன் பின்னர் 17.11.2022 முதல் 05.12.2022 வரை திருச்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மீண்டும் துறையூர் அன்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மாதமாக சிகிச்சை பெற்று வருகிறார். இன்றுவரை அவர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார். மனுதாரர் மருத்துவ செலவுகளுக்காக ரூ.3,00,000/-க்கும் அதிகமாக செலவழித்துள்ளார். எதிர்கால மருத்துவச் செலவுகளுக்காக ரூ.2,00,000/-ம் ஆகும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

(2.2)விபத்து குறித்து துறையூர் காவல் நிலைய குற்ற எண்.352/2022, இதச பிரிவு 279, 337-ன் கீழ் 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான, TN 18 BJ 1909 பதிவு எண் கொண்ட மகேந்திரா பொலிரோ வாகனத்தின் ஓட்டுநருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்தில், மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. மேலும் அவரால் தனது வழக்கமான பணிகளைசெய்ய முடியவில்லை. அவரது வலது கால் பெருவிரல் எலும்பு முறிவு, முக எலும்பு முறிவு ஆகியவற்றின் காரணமாக, அவரால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. அவரால் உட்காரவோ நிற்கவோ, ஊன்றுகோல் இல்லாமல் நடக்கவோ முடியவில்லை. மனுதாரருடைய தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக, மனுதாரருக்கு வாந்தி மற்றும் தலைவலி ஏற்படுகிறது. இதுநாள்வரை, மனுதாரருக்கு தலைவலி இருந்து வருகிறது. அவரால் திட உணவை உண்ண முடியவில்லை. அவரது லேசான முக எலும்புக் காயத்தால், அவரது முகம் சிதைந்து, கழுத்து அசைவற்றுப் போனது. அவருக்குச் சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், மனுதாரரின் இயல்பு நிலை திரும்பவில்லை.

(2.3)விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 24 வயது, விபத்துக்கு முன்பு மனுதாரர் நலமாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தார். விபத்துக்கு முன்பு, மனுதாரர் தபால்காரராகவும், மாலை நேரங்களில் தச்சு வேலையும் செய்து வந்தார். அவர் மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்தார். மனுதாரர் அரவது குடும்பத்தின் ஒரே வருமானம் ஈட்டுபவராக இருந்தார். மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது மனுதாரரால் முன்பு போல் தனது தொழிலையும் அன்றாட பணிகளையும் செய்ய முடியவில்லை. மேலும் மனுதாரருக்கு எதிர்கால வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட வலி

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:23 +0530

மற்றும் வேதனை, வருமான இழப்பு, போக்குவரத்து செலவு, உடனிருந்தோர் செலவு, ஊட்டச்சத்து செலவு, ஆடைகள் சொத்து இழப்பு ஆகியவற்றிற்காக மனுதாரர் இழப்பீடாக ரூ.20,00,000/- கோருகிறார். 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான விபத்து ஏற்படுத்திய வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இரு எதிர்மனுதாரர்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள்.

1-ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**<u>2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

**(3.1)**மனு சங்கதிகள் அனைத்தும் பொய் என மறுக்கப்படுகின்றன. இதில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுகளை தவிர, மற்ற அனைத்து குற்றச்சாட்டுகளும் பொய்யானவை என மறுக்கப்படுகின்றன. விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநரிடம், ஓட்டுநர் உரிமம், பேட்ஜ், தகுதிச்சான்று இல்லை. மனுதாரருக்கும் விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை. எனவே, 1-ம் எதிர்மனுதாரர் மற்றும், அவரது ஓட்டுநர் மோட்டார் வாகன விதிகளை மீறியுள்ளனர். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரரின் வயது, தொழில், வருமானம், விபத்து நடந்ததாக கூறப்படும் இடம், நாள், நேரம், சிகிச்சை எடுத்துக்கொண்டதாக கூறப்படும் மருத்துவமனை, மனுதாரருக்கு ஏற்பட்டதாக கூறப்படும் காயங்கள், செய்யப்பட்ட சிகிச்சைகள், சிகிச்சை காலங்கள், நிரந்தர ஊனம் ஆகியவை மறுக்கப்படுகிறது. விபத்து சமயத்தில் மனுதாரர் 17.11.2022 அன்று மாலை சுமார் 04.30 மணியளவில் தலைக்கவசம் அணிந்து, TN 48 AQ 3135 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தில் துறையூர் to பெரம்லூர் சாலையில் பெருமாள் மலை அடிவாரம் ஆர்ச் அருகிலிருந்து கீரம்பூர் கிராமத்திற்குச் செல்வதற்காக, போக்குவரத்து விதிகளைப் பின்பற்றி ரோட்டை கடக்கும்போது 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டு சிகிச்சை பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது.

(3.2)உண்மையில், மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், உரிய கவனமின்றியும், எச்சரிக்கையின்றியும் வாகனத்தை மிகவும் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், பொறுப்பற்ற முறையிலும் கட்டுப்பாடின்றி அதிவேகத்தில் ஓட்டி, 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். அந்த விபத்திற்கு மனுதாரர் மட்டுமே முழு பொறுப்பாவார். விபத்து நடந்த நேரத்தில் மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் வழக்கில் சேர்க்காததால் இம்மனு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லவில்லை

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:29 +0530

என்றும், வருமானத்தை இழந்துள்ளார் என்றும் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. மனுதாரர் ரூ.20,00,000/- இழப்பீடு கோரியுள்ளதும் அதற்கு 12% வட்டி கோரியுள்ளதும் மிகவும் அதிகமானதாகும். தேதியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் தற்போதைய வட்டி விகிதமான ஆண்டுக்கு 5.5% மட்டுமே மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது. இந்த எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல. 1-ம் எதிர்மனுதாரருக்காகவும் எதிர்கட்சி செய்யும்பொருட்டு இந்த எதிர்மனுதாரர் மோ.வா.சட்டம் பிரிவு 170-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்** :-

1. மனு விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?
2.மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கக்கூடியதா? அவ்வாறெனில் கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத்தொகை எவ்வளவு?
3.மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டை எந்த எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர்?

5.மனுதாரர் தரப்பில் மனுதாரர் விவேக் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் 13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1-ம் எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மேலும் நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரச்சினை 1-ற்கான தீர்வு ..**

(6.1)மனுதாரர் தரப்பில் மனுதாரர் கடந்த 17.11.2022 -ம் தேதி மாலை 4.30 மணியளவில் அவரது TN 48 AQ 3135 Hero இருசக்கர வாகனத்தில் துறையூர் to பெரம்பலூர் மெயின்ரோட்டில் பெருமாள் மலை அடிவாரம் ஆர்ச்சிலிருந்து கீரம்பூர் செல்வதற்காக போக்குவரத்து விதிகளை அனுசரித்து ரோட்டை கடக்க தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் வடக்குபுற ஓரத்திற்கு சென்றபின்னர் 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 18 BJ 1909 மகேந்திரா பொலிரோ வாகனத்தை அதன் ஓட்டுநர் மேற்படி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஹாரன் அடிக்காமலும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும், கட்டுப்படுத்த முடியாத வேகத்திலும் ஓட்டி சென்று, மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் மனுதாரருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு சிகிச்சை பெற்றதாகவும், விபத்து குறித்து துறையூர் காவல் நிலைய குற்ற எண்.352/2022, இதச பிரிவு 279, 337-ன் கீழ் 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு பின்னர் விசாரணை முடிக்கப்பட்டு குற்ற அறிக்கையும் தாக்கல்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:33 +0530

செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவே காரணம் என்றும் வாதிடப்பட்டது.

(6.2)2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தின்போது மனுதாரர் ரோட்டில் வரும் வாகனங்களை கவனிக்காமல் பெருமாள்மலை அடிவாரம் ஆர்ச்சிலிருந்து கீரம்பூர் செல்லும் ரோட்டிற்கு வருவதற்காக ரோட்டை கடக்க முற்படும்போது போக்குவரத்து விதிகளை மதிக்காமல் இருபுறமும் வாகனங்கள் வருகிறதா என பார்க்காமல் திடீரென ரோட்டை கடக்க முயன்றதில் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றுகொண்டிருந்த 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்றும், விபத்திற்கும் 1-ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், காவல் துறையினரால் சரியாக விசாரணை செய்யப்படாமல் மனுதாரருக்கு லாபம் ஈட்டும் விதமாக உதவி செய்யும் நோக்கத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றும் வாதிடப்பட்டது.

(6.3)மனுதாரர் விவேக் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனு சங்கதிகளை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், குற்ற இறுதியறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.1, 5 ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் சாட்சியத்தின் மூலம் கடந்த 17.11.2022-ம் தேதி மனுவில் குறிப்பிட்டுள்ளபடி விபத்து நடைபெற்றுள்ளது என்பதும், மேற்படி விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 18 BJ 1909 மகேந்திரா பொலிரோ வாகனத்தின் ஓட்டுநர் தான் காரணம் என அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், வழக்கின் இறுதிகட்ட விசாரணை முடிக்கப்பட்டு துறையூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் நன்கு தெரியவருகிறது.

(6.4)2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிருரை சங்கதிகளை நிரூபிக்கும் விதமாகவோ, மனுதாரர் தரப்பு சாட்சியம், ஆவணங்களை மறுக்கும் விதமாகவோ, 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணமல்ல என்பதாகவோ, மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என்பதாகவோ எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித தனிப்பட்ட சாட்சிகளோ, ஆவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் விபத்து TN 18 BJ 1909 மகேந்திரா பொலிரோ வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்று மனுதாரர் தரப்பில் மனுவிலும், சாட்சியத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலும் TN 18 BJ 1909 மகேந்திரா பொலிரோ வாகனத்தின் ஓட்டுநர் ஹரிஹரசுதன் எதிரியாக

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:39 +0530

காட்டப்பட்டுள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் பேரில் விசாரணை முடித்து இறுதியறிக்கை 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது. மேற்படி ஆவணங்கள் மற்றும் ம.சா.1-ன் சாட்சியத்தை மறுக்கும் விதமாகவும், ஆட்சேபிக்கும் விதமாகவும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வேறு சாட்சியமோ, ஆவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. விபத்தின்போது வாகனத்தை ஓட்டிய 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்கவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிகள் ஆவணங்களின் படி TN 18 BJ 1909 மகேந்திரா பொலிரோ வாகனத்தின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்பது தெரியவரும் நிலையில் வழக்கு விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்று முடிவு செய்து அவ்வாறே பிரச்சினை 1-க்கு விடைகாணப்படுகிறது.

<u>**பிரச்சினை 2 -ற்கான தீர்வு ..**</u>

(7.1)மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை குறித்து பார்க்கையில் மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு கால்கள், முகம் மற்றும் தலை ஆகிய இடங்களில் அடிப்பட்டதால் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு உரிய சிகிச்சை பெற்றும் குணமடையவில்லை என்றும், இதனால் மனுதாரருக்கு வேலை இழப்பு, வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தான் வருமானத்தை இழந்து கஷ்ட ஜீவனம் செய்வதாகவும், தனக்கு ரூ.20,00,000/- இழப்பீடு வழங்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3, ம.சா.ஆ.4, ம.சா.ஆ.9, ம.சா.ஆ.10, ம.சா.ஆ.12, ம.சா.ஆ.13 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து 17.11.2022 அன்று ஏற்பட்ட உடன் துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்று அங்கு மனுதாரருக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் அளிக்கப்பட்டுள்ளது. மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு அங்கு 17.11.2022 முதல் 05.12.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதையும் மனுதாரருக்கு தலை, வலது கால், அடிவயிறு, முகம் ஆகிய பாகங்களில் அடிப்பட்டு அதற்கு சிகிச்சை பெற்றுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.3 மூலம் அறியமுடிகிறது. மேலும் திருச்சி அரசு மருத்துவமனையிலிருந்து பரிசோதனைகள் செய்து கொண்டு மனுதாரர் தானாகவே வெளியேறி துறையூர் அன்னை மருத்துவமனையில் 22.12.2022 அன்று அனுமதிக்கப்பட்டு 27.12.2022 வரை சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், மனுதாரருக்கு 23.12.2022 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.13- ன் மூலம் அறியமுடிகிறது. மேலும் மேற்படி ஆவணத்தில் Left Leg Both Fracture with deleyed union with tibia displacement – 5 weeks old என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:45 +0530

ம.சா.ஆ.9, ம.சா.ஆ.10, ம.சா.ஆ.13 ஆவணங்களின் மூலம் மனுதாரருக்கு விபத்து 2022-ம் ஆண்டு ஏற்பட்டிருந்தாலும் 2025 -ம் ஆண்டு வரை சிகிச்சை பெற்று வந்துள்ளதாக அறியமுடிகிறது.

(7.2)மனுதாரர் விபத்திற்கு முன்பு தான் தற்காலிக போஸ்ட்மேன் மற்றும் தச்சு வேலை செய்து மாதம் ரூ.30,000/- வருமானம் ஈட்டி வந்ததாகவும், விபத்தினால் தனக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், வருமானத்தை இழந்து தனது குடும்பம் வறுமையில் வாழ்வதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் தனது தொழில் வருமானம் குறித்த ஆவணங்கள் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. இருப்பினும் தற்காலிக போஸ்ட்மேன் வேலை மற்றும் தச்சு வேலை செய்யும் நபருக்கு தோராய வருமானமாக ரூ.15,000/- இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் சிகிச்சை எடுத்துக்கொண்ட நாட்களை கருத்தில் கொண்டு பார்க்கையில் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரால் 3 மாதம் வேலைக்கு செல்ல முடியாமல் இருந்திருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரருக்கு மாத வருமானம் ரூ.15,000/- என நிர்ணயம் செய்துள்ள நிலையில் 3 மாத வருமானமான ரூ.45,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ரூ.3,00,000/- செலவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ரூ.1,95,715/-க்கான பில்கள் மட்டுமே ம.சா.ஆ.9, 12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(7.3)மனுதாரரை அவருக்கு ஏற்பட்டிருக்கும் ஊனம் குறித்து பரிசோதனை செய்ய திருச்சிராப்பள்ளி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர், அவர்களிடம் பரிசோதனைக்கு அனுப்பியதில் மனுதாரருக்கு 30% சதவீதம் ஊனம் ஏற்பட்டுள்ளதாக நீ.ம.சா.ஆ.1 சான்றளிக்கப்பட்டுள்ளது. 2025(2) TN MAC 628 வெளியான மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் C.M.A.2785 of 2024, dated 20.06.2025 Sanmugam, Vs. Varadharajan Piradeep Kumar and another மற்றும் C.M.A.3423/2024, Dt: 21.12.2024 Ramasamy Vs. Arunkumar and two others என்ற வழக்குகளின் முன்தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரருக்கு விபத்து 17.11.2022-ம் தேதி நடைபெற்றுள்ளதால் தற்போதைய வாழ்க்கை செலவு கருத்தில் கொண்டு ஒரு ஊன சதவீதத்திற்கு ரூ.10,000/- வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதனடிப்படையில் பகுதி நிரந்தர ஊனத்திற்காக(30x10000=300000) ரூ.3,00,000/- மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(7.4)மனுதாரருக்கு செய்யப்பட்டுள்ள சிகிச்சைகளை கருத்தில் கொண்டும், மனுதாரர் விபத்தினால் அடைந்த காயங்களை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:50 +0530

ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்கு ரூ.75,000/-மும், மனுதாரர் போக்குவரத்து செலவு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களையும், துறையூர், திருச்சி மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக்கொண்டதையும், மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்ட நாட்களையும் கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/-மும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட வசதி இழப்பிற்கு ரூ.20,000/-மும், ஊட்டச்சத்துக்கு ரூ.10,000/-, மருத்துவமனையில் மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்ட காலத்தையும், இரண்டுமுறை மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்டதையும், அவரது வயதினையும் கருத்தில் கொண்டு மருத்துவமனையில் உடனிருந்தோர் மற்றும் உதவியாளருக்கு ரூ.10,000/-, ஆடைகள் சேதம் ரூ.1000/-, வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீட்டு தொகை கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டு பிரச்சினை எண்.2-ற்கு விடைகாணப்படுகிறது.

| வ.எண். | விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | பகுதி நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடு(30x10000) | 300000 |
| 2. | வலி மற்றும் வேதனைக்காக (Pain and Suffering) | 75000 |
| 3. | வசதி இழப்பு (Loss of Amenities) | 20000 |
| 4. | வருமான இழப்பு (Loss of Income)(15000x3) | 45000 |
| 5. | மருத்துவ பில் தொகை (Medical Bills) | 195715 |
| 6. | போக்குவரத்து செலவு (Transport Charges) | 10000 |

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:11:56 +0530

| | | |
|---|---|---|
| 7. | ஊட்டச்சத்திற்காக<br>(Nurishment) | 10000 |
| 8. | உடனிருப்போர் செலவு<br>(Attender Charges) | 10000 |
| 9. | ஆடைகள் சேதம்<br>(Damages Cloths) | 1000 |
| மொத்தம் | | 666715 |

**பிரச்சினை 3 -ற்கான தீர்வு ..**

(8.1)மனுதாரர் தரப்பில் முக்கிய வாதமாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் 1-ம் எதிர்மனுதாரர் என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டாளர் 2-ம் எதிர்மனுதாரர் என்றும், விபத்தின்போது 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்துள்ளது என்றும், எனவே, 2-ம் எதிர்மனுதாரர் தான் விபத்தில் பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், எனவே, மேற்படி விபத்திற்கு எதிர்மனுதாரர்கள் கூட்டாக சேர்ந்தோ, அல்லது தனித்தனியாகவோ இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், வாதம் முன் வைக்கப்பட்டது. 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது மறுக்கப்படவில்லை. ம.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் TN 18 BJ 1909 மகேந்திரா பொலிரோ வாகனத்தின் உரிமையாளர் 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும் ம.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் விபத்தின் போது 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு உள்ளது என்பதும், ம.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதும் நிரூபணமாகிறது. மேலும் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தில் காப்பீட்டு விதிமீறல் ஏற்பட்டதாக தனிப்பட்ட சாட்சிகள், ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் காப்பீட்டாளரே விபத்தில் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும். அந்த வகையில் இம்மனுவில் விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் தான் காரணம் என்று ஏற்கனவே, பிரச்சினை 1-ல் முடிவு செய்திருப்பதாலும், 1-ம் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்தின்போது 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அது நிலுவையிலிருப்பதாலும், 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை மனுதாரருக்கு

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:12:01 +0530

கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சினை 3-ற்கு விடைகாணப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையாக ரூ.6,66,715/- ஐ 2-ம் எதிர்மனுதாரர் இம்மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் தேதி வரை 7.5 % வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் துறையூர் சார்பு நீதிமன்ற துறையூர் பாரத ஸ்டேட் வங்கி கணக்கு எண்.37122580557, வங்கியின் IFSC No.SBIN0000765 -ல் e transfer மூலம் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணத்தை 2 வார காலத்திற்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.25,167/- என நிர்ணயிக்கப்படுகிறது.

## மற்ற முக்கிய விவரங்கள்

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த தேதி | : | 21.08.2023 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | : | 23.08.2023 |
| மனு உத்தரவான தேதி | : | 04.08.2026 |
| மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை | Rs. | 20,00,000 |
| மனுவில் உத்தரவான இழப்பீட்டு தொகை | Rs. | 6,66,715 |
| முழு நீதிமன்ற கட்டணம் | Rs. | 6039.65 |
| முன்னரே செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | Rs. | 372.50 |
| பாக்கி நீதிமன்ற கட்டணம். | Rs. | 5667.15 |

## செலவுத்தொகை பட்டியல்

| வ.எண். | விவரம் | மனுதாரர் தரப்பு | |
|---|---|---|---|
| 1. | இழப்பீட்டுத்தொகைக்கான நீதிமன்ற கட்டணம் | 6039 | .50 |

C VIJAY KARTHIK

Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:12:09 +0530

| | | | |
|---|---|---|---|
| 2. | வக்காலத்து | 10 | .00 |
| 3. | கட்டளை தயாரிக்க, சேர்ப்பிக்க | 50 | .00 |
| 4. | மனு தயாரிக்க | 200 | .00 |
| 5. | வழக்கறிஞர் கட்டணம் | 25167 | .00 |
| | மொத்தம் | 31466 | .50 |

இன்று 2026 -ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

C VIJAY KARTHIK
Digitally signed by C VIJAY KARTHIK
Date: 2026.08.04 18:12:16 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

ம.சா.1 .. விவேக்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

ம.சா.ஆ.1 .. விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கை நகல் சான்றிட்ட நகல்

ம.சா.ஆ.2 .. துறையூர் அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட AR Copy

ம.சா.ஆ.3 .. திருச்சி அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட AR Copy

ம.சா.ஆ.4 .. ஸ்ரீ ஆர்த்தோ மருத்துவமனையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட புறநோயாளி சீட்டு

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | .. | விபத்து குறித்த குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதிய அறிக்கை |
| ம.சா.ஆ.6 | .. | 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் RC book |
| ம.சா.ஆ 7 | .. | 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல் |
| ம.சா.ஆ.8 | .. | 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.9 | .. | மருத்துவ பில்கள் |
| ம.சா.ஆ.10 | .. | மருத்துவ குறிப்புகள் |
| ம.சா.ஆ.11 | .. | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.12 | .. | மருத்துவ பில்கள் |
| ம.சா.ஆ.13 | .. | துறையூர் அன்னை மருத்துவமனையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கை |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**.. இல்லை

**நீதிமன்ற சான்றாவணங்கள்..**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | .. | திருச்சிராப்பள்ளி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர், அவர்கள் மனுதாரருக்கு வழங்கிய ஊனச்சான்று |

C VIJAY KARTHIK Digitally signed by C VIJAY KARTHIK Date: 2026.08.04 18:12:23 +0530

சார்பு நீதிபதி,
துறையூர்.

குறிப்பு .. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் சோழமண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272 என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின் படி இவ்வழக்கிற்குரிய தீர்ப்பாணை விவரங்கள் அனைத்தும் இந்த தீர்ப்புரையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.